சிந்தனை
தொகுதி vi இதழ் iii – 1994

# அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்காணலும், வகைப்படுத்தலும், மதிப்பிடலும்

அ. வே. மணிவாசகர்

## அறிமுகம்

'பாட்டயர்' ( Partitire ) என்ற பிரெஞ்சு மொழிப் பதத்திலிருந்து தோன்றிய 'கட்சி' (Party) என்ற ஆங்கிலப்பதமானது மூலப் பதத்தின் பிரகாரம் 'பிரிப்பது' (to divide) என்ற பொருளைப் பெறுகிறது அதேசமயம் 'பாட்டோஜர்' (Partoger) என்ற பிரேஞ்சுப் பதத்துடனும் தொடர்புபட்டு கட்சி என்பது (அரசியல்) 'பங்குகொள்ளல்' (Partaking) என்ற பொருளையும் தருகிறது (அஷ்ரப்பும் சர்மாவும், 1992:96) இருப்பினும், பொதுவாகக் கட்சிகள் என்பவை சமூகத்தைப் பிரித்து தேசமுன்னேற்றத்தைத் தடுக்கும் சக்திகள் என்ற அபிப்பிராயமே நீண்ட காலமாக நிலைத்திருந்தது. ஆரம்பங்களில் குறுகிய நோக்கங்களுடன் இயங்கி வந்த சமூகக் குழுக்களே பெரும்பாலும் கட்சிகளாகப் பின்னர் பரிணாம வளர்ச்சி பெற்றமையும், கட்சிகள் பல்வேறு சமூகக் குழுக்களுடனும் தொடர்புகளைப் பேணி வந்தமையும் இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். சொறொவ், ( 1964 : 57 ), எப்ஸ்ரின் ( 1967 : அத் - 1,9 ) கிங் (1969 : 111 - 41), கீவ்ப் (1972 : 1 -6) போன்ற சமகால அறிஞர்கள்கூடக் கட்சிகள் பற்றிய எதிர்மறையான அபிப்பிராயங்களை முழுமையாகக் கைவிட்டுவிடவில்லை.

ஏகபோக முடியாட்சியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தவும், சர்வசன வாக்குரிமையை விஸ்தரிக்கவும் மேற்குலகில் தோன்றிய பல இயக்கங்கள் அரசியல் யாப்பு வளர்ச்சிக்கும், பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கும் வழிதிறந்துவிட்ட போது அவற்றுடன் இணைந்த அம்சமாக அரசியல் கட்சிகளும் அறிமுகமாயின. 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகளில் அமெரிக்காவிலும், 19ம் நூற்றாண்டின் மத்திய பகுதிகளில் ஐரோப்பாவில் இங்கிலாந்திலும், பிரான்சிலும், ஆசியாவில் ஜப்பானிலும் கணிசமான அளவுக்குக் கட்சிகளின் அடிப்படைகள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன ( பலொம்பாராவும், வெயினரும் 1966 ). இருப்பினும் கட்சிகளின் நவீன வளர்ச்சியும் முக்கியத்துவமும் 20ம் நூற்றாண்டிலேயே என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது என்பது உண்மையாகும். அதற்கு இணையாக இந்நூற்றாண்டில் மொஸ்கோ (1939), ஸ்கறீச்நெய்டர் (1942), மிச்சல்ஸ் (1949), டுவேஜர் (1954), நியூமன் (1956), பரட்டோ ( 1963 ), ஒஸ்ட்றோ கொர்ஸ்கி

*(1964)* கி *(1964)*, சாட்டோரி *( 1976 )* போன்ற பல்வேறு நாட்டு அறிஞர்கள் பல்வேறு கோணங்களிலிருந்து அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளின் பங்கைச் சிறப்பாக ஆய்வு செய்துள்ளனர். இன்று அரசாங்க இயக்கத்தின் உயிரோட்டமாகக் காணப்படும் கட்சிகளைப் பற்றிய ஆய்வுகள் அரசறிவியலின் நவீன பாடப்பரப்புக்களான ஒப்பீட்டு அரசியலிலும், அரசியல் சமூகவியலிலும் பிரபலம் அடைந்துள்ளன.

அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்காணல்

கட்சிகள் என்பவை இன்று சகல அரசியல் முறைகளுக்கும் பொதுவான அம்சமாகக் காணப்படுகிறது. ஐரோப்பிய - அமெரிக்க ஜனநாயக முறைகளிலும் சரி, இரு உலகப்போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் காணப்பட்ட பாசிச இத்தாலியிலும், நாஜிச ஜேர்மனியிலும் சரி, முன்னைய சோவியத் கம்யுனிச முறையிலும், இன்றைய சீனக் கம்யுனிச முறையிலும், ஏனைய சோசலிச முறைகளிலும் சரி, ஜனநாயகமோ அல்லது இராணுவ சர்வாதிகாரமோ நிலவும் பெரும்பாலான ஆசிய - ஆபிரிக்க - லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் சரி கட்சிகள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. கட்சிகள் இல்லாமல் நவீன அரசியல் முறைகள் எதனையும் நினைத்துப் பார்க்கமுடியாத நிலையே காணப்படுகிறது.

வெவ்வேறுபட்ட அரசியல் முறைகளில், வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில், வெவ்வேறுபட்ட நோக்கங்களையும், தொழிற்பாடுகளையும் கொண்டிருக்கும் கட்சிகளிடையே பொதுவான பண்புகளை இனம் காண்பது அரிது. குறிப்பிட்ட அரசியல் முறைகளை மையமாகக் கொண்டு கட்சிகள் பற்றிய ஆய்வுகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன இப்பிரச்சினைகள் முக்கியமாகக் கட்சிகள் பற்றிய வரைவிலக்கணங்கள், ஒழுங்கமைப்புக்கள் செயற்பாடுகள் என்ற மூன்று அடிப்படைகளில் எழுகின்றன. (Ranney *1968;143-62*)

வரைவிலக்கணச் சிக்கல்கள்.

அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனம் காணும் போக்கில் பல வரைவிலக்கண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் கட்சிகளை வரைவிலக்கணப்படுத்துவது இலகுவானதாக இருக்கவில்லை. கட்சிகளை ஏனைய சமூகக் குழுக்களிலிருந்தும் அரசியல் குழுக்களிலிருந்தும் வேறுபடுத்துவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன (மக்டொனால்ட், *1955 : அத். 1 ; கி, 1964:163 - 65*).

ஆரம்பங்களில் ஆங்கில அறிஞரான பேர்க் கட்சிகளைக் கோட்பாட்டு அடிப்படையில் இனங்கண்டு வரைவிலக்கணப்படுத்த முற்பட்டார். பேர்க்கின் படி 'அரசியல் கட்சி என்பது தேசிய நலனைப் பேணக்கூடிய ஒரு கொள்கையின் அடிப்படையில் இணங்கிக் கொண்ட மக்கள் குழு' ஆகும். மற்றோரிடத்தில் 'கட்சி என்பது தமது இணைந்த நடவடிக்கைகள் மூலம் பொதுநலனை முன்னெடுக்க முடியும் என்ற நோக்கில் சில கோட்பாடுகளில் யாவரினதும் சம்மதத்தைக் கண்ட ஒரு மக்கள் தொகுதி' என்கிறார் *(பைனர், 1963 : 240)*.

ஆனால், பின்வந்த அறிஞர்கள் பேர்க்கின் வரைவிலக்கணத்துடன் ஒத்துப் போகவில்லை கோட்பாட்டு ரீதியான ஒற்றுமை, இணக்கம் என்பவை போலியானவை என்றும், தற்காலிகமானவை என்றும் வலியுறுத்திய பிரான்சிய அறிஞரான டுவேஜர் 'அரசியல் கட்சிகள் என்பவை அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதையும், செயற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஒரு அரசியல் முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களாகும்' என்றார். மேலும் தனது வரைவிலக்கணம் ஜனநாயகத் தேர்தல் மூலமோ அல்லது புரட்சி மூலமோ அதிகாரத்தைக் கைப்பற்ற முற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் யாவற்றையும் உள்ளடக்குவதாகக் கூறினார் (டுவேஜர், *1954:24-25*). இதே போன்று ஷ்சும்பீற்றரும் 'அரசியல் கட்சி என்பது அதிகாரத்தைக்

கைப்பற்றும் போட்டித் தன்மையான போராட்டத்தில் ஒத்துச் செயற்படும் நோக்கம் கொண்ட அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழு' என்கிறார் (ஸ்கம்பீற்றர், 1950:22). நியூமனின்படி அரசியல் கட்சியானது சமூகத்தின் அரசியல் முகவர்களில் துலாம்பரமானதும் அரசியல் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துபவர்களுடன் தொடர்புடையதும், வெகுஜன ஆதரவுக்காக மற்றைய குழுக்களுடன் அல்லது மாறுபட்ட அபிப்பிராயம் கொண்ட குழுக்களுடன் போட்டியிடுகின்றதுமான ஒன்றாகும் (நியூமன், 1963 : 351).

ஆனால் தனித்துக் கோட்பாட்டின் அடிப்படையிலான வரைவிலக்கணங்கள் பூரணமில்லாதது போலவே, தனித்து அதிகாரத்தின் அடிப்படையிலான வரைவிலக்கணங்களும் கட்சிகளை விளக்கப் போதவில்லை. இதனால் கோட்பாடும், அதிகாரமும் கலந்த வரைவிலக்கணத்தின் அவசியம் உணரப்பட்டது. ஏனெனில் அதிகாரமும், கோட்பாடும் கட்சிகளின் இரு முக்கிய ஆயுதங்களாக இருப்பதுடன் ஒன்று மற்றொன்றைப் பலப்படுத்திப் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பிரிக்கமுடியாத இவ்விரு அம்சங்களையும் மையமாக வைத்து வரைவிலக்கணங்கள் எழுந்தன. இவ்வகையில ஹென்னஸ்ஸி என்பவர் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் கோட்பாட்டு ரீதியாக இணைந்து செயற்படும் குழுவே கட்சியென்று சுருக்கமாகவும் பொருத்தமாகவும் விளக்குகின்றார் (ஹென்னஸ்ஸி, 1968 : 1)

ஒழுங்கமைப்புச் சிக்கல்கள்,

ஒழுங்கமைப்புத் தன்மைகளும் கட்சிகள் பற்றிய ஆய்வில் பொதுமைப்பாட்டைத் தடுக்கின்றன. வெவ்வேறான அரசியல் முறைகளில் காணப்படும் கட்சி ஒழுங்கமைப்புக்களை ஆராயும் போது எழும் சிக்கல்களைக் குறைத்துக் கொள்வதற்காக நாம் பின்வரும் எடுகோள்களை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் (Ball 1971:84).

1. ஒழுங்கமைப்பில் கட்சித் தலைமைத்துவத்தின் பங்கும் அது தேர்ந்தெடுக்கப்படும் முறையும்;

2. ஒழுங்கமைப்பில் மத்திய மயமாக்கத்தின் அளவு;

3. ஒழுங்கமைப்பில் தலைமைத்துவத்துக்கும் ஏனைய மட்டங்களுக்கும் இடையிலான உறவுகளும், ஒழுக்காற்று நடவடிக்கைகளும், ஜனநாயகப் பங்கு பற்றலும்;

4. கட்சிப் பணித்துறை ஆட்சியின் கட்டுப்படுத்தும் தன்மை.

5. கட்சியின் பாராளுமன்றப் பிரிவுக்கும் ஏனைய பிரிவுகளுக்கும் இடையிலான உறவுகள்;

6 கட்சி அங்கத்துவத்தின் இயல்பும் அளவும்.

மேற்கூறிய எடுகோள்களின் அடிப்படையில் நாம் ஜனநாயகக் கட்சி ஒழுங்கமைப்புக்களையும், கம்யுனிச, பாசிசக் கட்சி ஒழுங்கமைப்புக்களையும் ஓரளவு வேறுபடுத்தி அறியலாம். ஜனநாயகக்கட்சி ஒழுங்கமைப்புக்கள் திறந்தவையாகவும், பன்முகப்படுத்தப்பட்டவையாகவும் இருக்கையில், கம்யுனிச, பாசிசக்கட்சி ஒழுங்கமைப்புக்கள் மூடப்பட்டவையாகவும் மத்திய மயப்படுத்தப்பட்டவையாகவும் இருக்கின்றன.

ஜனநாயகக் கட்சிகளில் சிறிய தொகைப் பணத்தை வருடச்சந்தாவாகச் செலுத்தி நேரடி அங்கத்துவம் பெற முடியும். சில ஜனநாயகக்கட்சிகள் மறைமுக அங்கத்தவர்களையும் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, பிரித்தானிய தொழிற்கட்சிக்கு ஆதரவான தொழிற்சங்கங்களில் அங்கம்வகிப்போர் தொழிற்கட்சியின் அங்கத்தவர்களாகவும் கருதப்படுகின்றார்கள். இப்பண்புகளைப் பெரும்

பாலும் ஐரோப்பிய சோசலிசக் கட்சிகளிலும், கத்தோலிக்க மதச்சார்புடைய கட்சிகளிலும் காணமுடிகிறது. சில சமயங்களிலும் கட்சியின் உள்வாரியான ஒழுங்கமைப்புக்கும், வெளிவாரியான ஒழுங்கமைப்புக்கும் இடையில் அபிப்பிராய பேதங்களும், முறுகல் நிலைமைகளும் தோன்றுதல் உண்டு.

ஜனநாயகக்கட்சி ஒழுங்கமைப்பில் கட்சியின் சகல அமைப்புக்களும் பங்குபற்றும் வருடாந்த மகாநாடு முக்கியமானது. இம்மகாநாட்டிலேயே கட்சியின் கொள்கை உருவாக்கமும், தீர்மானங்களும், நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவும் இடம்பெறுகின்றன. ஆனால் கட்சி மகாநாடுகள் வருடாந்த சம்பிரதாய நிகழ்ச்சிகள் என்றும் கட்சியின் பாராளுமன்றப் பிரிவே ஒழுங்கமைப்பின் சகல விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துவதாகச் சிலரால் சுட்டிக் காட்டப்படுகிறது. ஜனநாயக முறைகளில் ஒப்பீட்டுரீதியில் மிகவும் தளர்ச்சியான ஒழுங்கமைப்பை அமெரிக்கக் கட்சிகள் கொண்டுள்ளன.

ஜனநாயகக் கட்சிகளைப் பொறுத்த வரையில் தமது கட்சிப் பரிபாலனத்துக்கும், தேர்தல் செலவுகளுக்கும் சமூகத்தின் பொருளாதார - வர்த்தக அமைப்புக்கள் வழங்கும் நிதியையே நம்பியுள்ளன. மேற்கு ஜேர்மனியிலும், இந்தியாவிலும் தமது தேர்தல் செலவுகளைத் தாங்கவும், கட்சி நிதிக்கு தாராளமாக வழங்கவும் வல்லவர்களுக்கே அபேட்சகர் நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்தகைய பணபலத்தின் தீமைகளை மட்டுப்படுத்தும் சில நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. பிரித்தானியாவிலும், அண்மையில் இந்தியாவிலும் அபேட்சகர்கள் தேர்தலுக்குச் செலவிடும் பணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜப்பான், இஸ்ரேல், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கட்சி பெறும் நிதியுதவிகள் திட்டவட்டமான வழிமுறைகள் மூலம் நெறிப்படுத்தப்படுகின்றன. மேற்கு ஜேர்மனி, ஸ்பெயின், சுவீடன் போன்ற நாடுகளில் கட்சிகளின் தேர்தல் தொகுதி பலத்துக்கமைய அரசாங்கம் மானியம் வழங்குகிறது (அலெக்சாந்தர், 1972: றோஸ்ஸும் ஹைடன்ஹெய்மரும், 1963).

'பாட்டாளிகளின் முன்னணிப் படை' என்று வர்ணிக்கப்படும் கம்யுனிசக்கட்சி மிகவும் இறுக்கமான அரசியல் – இராணுவ ஒழுங்கமைப்பைக் கொண்டுள்ளது. புரட்சி நோக்கம்கொண்ட கம்யுனிஸ்டுக்கள் ஒழுங்கமைப்பில் அங்கத்துவத்தை மட்டுப்படுத்திக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விழைகின்றனர். லெனினின் ஜனநாயக மத்திய வர்க்கம் (Democratic Centralism) என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே கம்யுனிஸ்டுக்கள் கட்சியை ஒழுங்கமைக்கின்றனர். ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான ஜனநாயகத்தையும், மத்தியமயமாக்கத்தையும் வலியுறுத்தும் இந்த விசித்திரமான தத்துவத்தின் நடைமுறையைப் பார்க்கும்போது ஜனநாயகம் என்பது பெயரளவில் இருக்க மத்தியமயமாக்கம் என்பதே முனைப்படைந்து காணப்படுகிறது. மத்திய குழுவின் செல்வாக்கு மிக்க சில அங்கத்தவர்களை உள்ளடக்கிய 'பொலிற்பீரோ' (Poltitlurau) என்ற அமைப்பே கம்யூனிசக் கட்சி ஒழுங்கமைப்பில் மிகவும் சக்தி வாய்ந்த அமைப்பாகும். (பிறைட்றிக்கும் பிர்ஷேஷின்ஸ்கியும், 1965; அத், 3)

அதிதீவிர தேசியவாதிகளாகவும், ஆக்கிரமிப்புத்தன்மை கொண்ட ஏகாதிபத்தியவாதிகளாகவும் காணப்படும். பாசிசவாதிகளின் கட்சி ஒழுங்கமைப்பு, கம்யூனிசக் கட்சியைவிட மேலும் இறுக்கமானதாகவும், முற்றிலும் இராணுவ பாணியிலானதாகவும், அமைகிறது. இராணுவ சீருடையின் நிறத்தின் அடிப்படையில் முசோலினியின் பாசிசக் கட்சி அங்கத்தவர்கள் 'கருஞ்சட்டையினர்' (Black Shirts) என்றும் ஹிட்லரின் நாஜிசக்கட்சி அங்கத்தவர்கள் 'மாநிறச்சட்டையினர்' (Brown Shirts) என்றும் அழைக்கப்பட்டனர். (கிறிகர் 1969) சாதாரண மக்களை நடைப்பிணங்களாகக் கருதும் பாசிசம், உயர்குழாம் ஒழுங்கமைப்பில் நம்பிக்கை கொண்டது.

செயற்பாட்டுச் சிக்கல்கள் :

அரசியல் முறைகளின் அபிவிருத்திகளுக்கேற்ப கட்சிகளின் தொழிற்பாடுகளிலும் தரரீதியான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளின் கட்சிகளின் தொழிற்பாடும் ஒன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அவ்வாறே ஜனநாயக அரசியல் முறைகளில் கட்சிகளின் தொழிற்பாடானது கம்யூனிச, பாசிச அரசியல் முறைகளில் உள்ள கட்சிகளின் தொழிற்பாட்டிலிருந்து வேறுபட்டிருக்கும். ஒரே அரசியல் முறையில் கூட சகல கட்சிகளும் ஒரே விதமான தொழிற்பாட்டைக் கொண்டிருக்கும் என்று கூறமுடியாது. தேசியக் கட்சிகளும், பிரதேச ரீதியான கட்சிகளும், குழு நலன் பேணும் கட்சிகளும், கிளர்ச்சி நோக்கம் கொண்ட கட்சிகளும் தொழிற்பாட்டு ரீதியில் வேறுபட்டிருக்கும்.

ஜனநாயக அரசியல் முறைகளில் கட்சிகளின் தொழிற்பாட்டு விரிவுகளை விளக்கும் நியூமன் அவை ''அபிப்பிராய முகவர்களாகவும், கோட்பாட்டை ஒழுங்குபடுத்தியும் தெளிவுபடுத்தியும் தொடர்ச்சியாக வெளிப்படுத்துபவையாகவும், சமூகக் குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்பவையாகவும், சமூகத்தையும் தனிமனிதனையும் பிரிக்கும் இடைவெளியைக் குறைப்பவையாகவும், வாக்காளரின் அரசியல் அறிவை விருத்தி செய்பவையாகவும், அவர்களின் சுதந்திரமான விருப்பத் தெரிவைக் கூர்மைப்படுத்துபவையாகவும் உள்ளன'' என்கிறார். (நியூமன் 1956:396).

ஹெனிங், பைண்டர் என்போரின் படி ஜனநாயகக் கட்சிகள் பொதுவாக அரசாங்கத்துக்கும், குறிப்பாக, சட்ட - நிர்வாகத் துறைகளுக்கு ஆட்சேர்ப்புக்கும், சேர்க்கப்பட்ட அங்கத்தவர்களை நிச்சயமான கோட்பாடுகளின் அடிப்படையில் ஒருங்கிணைப்பதற்கும், அரசாங்கத்துக்கும், பொதுசன அபிப்பிராயத்துக்கும் இடையில் தொடர்பாளராக இயங்குவதற்கும், இன, மத, மொழி, பிரதேச ரீதியான உணர்வுகளைக் கடந்து சமூக நலன்களை ஒன்றுபடுத்தி வெளிப்படுத்தவும் உதவுகின்றன (ஹெனிங்கும் பைண்டரும், 1969:15 - 18).

பூரணமான கம்யுனிச அரசியல் முறையில் கம்யுனிசக்கட்சி மாத்திரமே இயங்குவதாலும், இறுக்கமான ஒழுங்கமைப்பையும் உறுதியான கோட்பாட்டையும் அது கொண்டிருப்பதாலும் அதன் தொழிற்பாடுகள் தெளிவானவையாகவும் திட்டவட்டமானவையாகவும் உள்ளன. பாட்டாளிப் புரட்சியை முன்னெடுத்துச் சோசலிச சமூகத்தை நிர்மாணித்த பின் அரசில்லாத கம்யுனிச சமூகத்தை நோக்கிய பயணத்திற்குக் களம் அமைக்கும் கம்யுனிசக்கட்சி வரலாற்று ரீதியான உன்னதமான பணியை ஆற்றுவதாக விளக்கம் அளிக்கப்படுகிறது. கம்யுனிசக் கட்சியின் ஐக்கியமும், பலமும் உளவுப் படையின் செயற்பாடுகள் மூலமும் பேணப்படுகின்றன. கம்யுனிசக் கட்சியைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் தலைமைத்துவம் அவ்வப்போது களையெடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. ஆனால் பல கட்சி முறைகளில் தொழிற்படும் கம்யுனிசக் கட்சிகள் பல ஜனநாயகப் பண்புகளை உள்வாங்கியுள்ளன.

பாசிசக்கட்சியின் தொழிற்பாட்டை 'பயங்கரவாதம்' என்ற ஒரு சொல்லில் அடக்கிவிடலாம். உள்நாட்டில் எதிர்ப்புக்களை முறியடிக்கத் தாராளமாகப் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் பாசிசவாதிகள், அர்த்தமில்லாத யுத்தங்களை ஆரம்பித்து வெளிநாடுகளுக்கும் பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்கின்றனர். மக்கள் குரலை நசுக்கியும், ஆயுத உற்பத்திக்கு முக்கியம் வழங்கியும், ஆயுதப் படைகளைப் பலப்படுத்தியும், பிரச்சார சாதனங்களை முடுக்கிவிட்டும், தலைமைத்துவப் புகழ் பாடியும் பாசிசக் கட்சியின் தொழிற்பாட்டுக்கு உத்வேகம் வழங்கப்படுகிறது.

**அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை வகைப்படுத்தல்:**

பல்வேறு அரசியல் முறைகளிலும் காணப்படும் கட்சிகளை வகைப்படுத்த முன்னர், கட்சிகள் இல்லாத அரசியல் முறைகள் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். கட்சிகள் இல்லாத அரசியல் முறைகள் பாரம்பரிய முடியாட்சிகளிலும், இராணுவ சர்வாதிகாரங்களிலும் காணப்படுகின்றன. விளண்டல் என்ற அறிஞரின் படி 1960 களில் இத்தகைய கட்சிகள் இல்லாத 14 முடியாட்சிகளும், 17 இராணுவ சர்வாதிகாரங்களும் காணப்பட்டன (விளண்டல், 1969: 141) இவற்றில் பெரும்பாலானவை மத்திய கிழக்கிலும், ஆபிரிக்காவிலும், தென்சகாரா, தென்கிழக்கு ஆசியா போன்ற பிரதேசங்களிலும் உள்ள சிறிய, முக்கியத்துவம் குறைந்த அரசுகளாகும் பாரம்பரிய முடியாட்சிகளில் கட்சி வளர்ச்சிக்கான சூழ்நிலைகள் இல்லை. பெரும்பாலான இராணுவ சர்வாதிகாரங்களில் கட்சிகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

அரசியல் கட்சிகளை மரபுரீதியான ஒரு கட்சிமுறை, இருகட்சி முறை, பல கட்சி முறை என்று மூன்றாக வகைப்படுத்தல் இன்று பொருத்தமற்றதாகக் கருதப்படுகிறது ஒரு கட்சிமுறை, ஒரு கட்சிக்கு மேற்பட்ட முறை என்ற இரு பிரதான பிரிவுகளில் பல உப பிரிவுகளை உள்ளடக்கி நவீன அபிவிருத்திகளை விளக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு கட்சி முறை: (One Party System)

20ம் நூற்றாண்டில் பலம் வாய்ந்த ஒரு கட்சி முறையை இடதுசாரி அல்லது வலதுசாரிச் சர்வாதிகாரங்களில் காணலாம் ஆனால் பலவீனமான ஒரு கட்சி முறைப் போக்கினை ஏனைய முறைகளிலும் காணமுடிகிறது. போலந்து நாட்டின் சமகால அரசறிவியலாளரான உவெய்ற்றர் என்பவர் ஒரு கட்சி முறையை தனிக் கட்சிமுறை, தலைமைக் கட்சி முறை, ஆதிக்கக் கட்சிமுறை என்ற மூன்று பிரிவாக வகைப்படுத்துகிறார். (Wiater, 1964: 281 - 90)

தனிக் கட்சி முறை (Monoparty System)

ஒரு அரசியல் முறையானது தனியொரு கட்சியை மாத்திரம் இயங்க அனுமதிக்குமானால் அது தனிக்கட்சிமுறை எனப்படுகிறது. இரு உலக யுத்தங்களுக்கிடைப்பட்ட காலத்தில் ஜேர்மனியில் காணப்பட்ட ஹிட்லரின் நாஜிசக் கட்சியும், இத்தாலியில் காணப்பட்ட முசோலினியின் பாசிசக்கட்சியும், சீன, (முன்னைய) சோவியத் கம்யூனிசக் கட்சிகளும் தனிக் கட்சிமுறைக்குச் சிறந்த உதாரணங்களாகும். தாம் வரித்துக்கொண்ட தீவிர சித்தாந்தங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்த தனியொரு கட்சியே உகந்தது என்றும், பல கட்சிகளின் இயக்கம் குழப்பத்துக்கும், திறமையின்மைக்கும், சமூகச் சீரழிவுக்கும் வழிவகுத்துவிடும் என்றும் பாசிசவாதிகளும், தீவிர கம்யுனிசவாதிகளும் கருதுகின்றனர். இதனால் மாற்றுக் கட்சிகளை அவர்கள் மதிப்பதோ அல்லது சகிப்பதோ கிடையாது. தனிக்கட்சி முறையானது படிப்படியாகப் பலம் இழந்து மறைந்து வருவதை வரலாறு காட்டுகிறது.

தலைமைக் கட்சி முறை:
(Hegemonic Party System)

தலைமைக் கட்சிமுறை என்பது பல கட்சிகள் காணப்படினும் அவை செல்வாக்குமிக்க கட்சியின் தலைமைத்துவத்தையேற்றுக்கொண்டு அதனுடன் இணைந்து கூட்டாகத் தேர்தலில் போட்டியிடுவதாகும். சமீபகாலம்வரை சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு ஐரோப்பிய கம்யுனிச நாடுகளில் தலைமைக்கட்சிமுறை நிலவியது. தலைமைக்கட்சி முறைக்குச் சிறந்த உதாரணமாக உவெய்ற்றர் என்ற அறிஞர் போலந்

தைச் சுட்டிக்காட்டுகிறார் அங்கு சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மூன்று கட்சிகளாக போலந்தின் ஐக்கிய தொழிலாளர் (கம்யுனிச) கட்சியும், ஐக்கிய விவசாயிகள் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் உள்ளன. இதில் முதல் குறிப்பிட்ட செல்வாக்கு மிக்க கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டு பின்னர் குறிப்பிட்ட இரு கட்சிகளும் அதனுடன் நிரந்தரமாக மக்கள் முன்னணி ஒன்றில் இணைந்து கூட்டாக அபேட்சகர் பட்டியலைத் தயாரித்துத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்தன. ஆனால் தனிக்கட்சி முறைக்கும் தலைமைக்கட்சிக்கும் இடையில் அதிக வேறுபாடுகளை மேற்கு நாட்டு ஆய்வாளர்கள் காண்பதில்லை.

## ஆதிக்கக் கட்சி முறை: (Dominant Party System)

கீ என்ற அறிஞர் அமெரிக்காவின் தென் மாநிலங்களில் ஜனநாயகக் கட்சியின் ஆதிக்கத்தைக் குறிப்பதற்கு ஆதிக்கக் கட்சி என்ற பதத்தை முதலில் பயன்படுத்தினார் (கீ, 1949: 298 - 311). பின்னர் டுவேஜரினால் அது மேலும் விரிவுபடுத்தப்பட்டது. டுவேஜரின்படி ஒரு ஆதிக்கக் கட்சி இரு கட்சி முறையில் அல்லது பல கட்சி முறையில் பின்வரும் இரு பிரதான இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவதாக, அது போட்டிக் கட்சிகளை நீண்ட காலத்திற்குத் தேர்தலில் ஓரம் கட்டியிருக்க வேண்டும். இரண்டாவதாக, அது தனது கோட்பாடுகள், அமைப்பு, இயக்கம் போன்றவற்றால் தன்னை முழு நாட்டுடனும் இனம் காணக்கூடியதாக இருக்க வேண்டும் (டுவேஜர், 1972:36) பிரான்சின் மூன்றாம் குடியரசில் இடம் பெற்ற தீவிரவாதக் கட்சியும் ஸ்கன்டிநேவியாவின் சமூக ஜனநாயகக் கட்சியும் டுவேஜரினால் ஆதிக்கக் கட்சி முறைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது. பின்னர் இம்முறை காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம் காணப்பட்ட இந்தியாவுக்கும், மெக்ஸிக்கோ, மலேஷியா, உறுகுவான் போன்ற நாடுகளுக்கும் பிரயோகிக்கப்பட்டது.

## ஒரு கட்சிக்கு மேற்பட்ட முறை (System of more than one party)

உலகில் சுமார் 2/5 பங்குக்கு மேற்பட்ட அரசியல் முறைகள் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளைக் கொண்டுள்ளன. (பூசன் 1988: 116). ஒரு கட்சிக்கு மேற்பட்ட கட்சி முறையில் இரு கட்சி முறை, இரண்டரைக் கட்சிமுறை, பல கட்சி முறை கச்சோல் கட்சிமுறை என்ற நான்கு பிரிவுகளைக் காணலாம்.

## இரு கட்சி முறை (Bi - Party System)

இரு கட்சி முறையில் ஏறக்குறைய சமமான பலம் கொண்ட இரு பெரும் கட்சிகள் ஒன்றுமாறி ஒன்றாக ஆளுங்கட்சியாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம். வேறு கட்சிகள் இருந்தாலும் அவை மிகவும் சிறியவையாகவும், முக்கியத்துவம் குறைந்தவையாகவுமே இருக்கும்.

ஜனநாயக ஆட்சிக்கு மிகவும் ஆரோக்கியமானதாகக் கருதப்படும் இருகட்சி முறை அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் சிறப்பாக அபிவிருத்தியடைந்துள்ளது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என்பவையும் இம்முறையில் நிலைத்துள்ளன. ஆரம்பக் கட்சிமுறையின் தொடர்ச்சியும், பிரதம நிர்வாகி மக்களினால் நேரடியாகத் தெரியப்படலும், மக்களின் சில முக்கிய அரசியல் நம்பிக்கைகளும், மனப்போக்குகளும், அடிப்படை விடயங்களில் மக்களின் சம்மதம் போன்ற காரணிகளும் அமெரிக்காவில் இரு கட்சி முறை பலம்பெற உதவியுள்ளன. (கீ, 1958: 227 - 30). இங்கிலாந்தில் இரு கட்சி முறையின் வளர்ச்சிக்கு ஓரினத்தன்மையான மக்களும், 19 ம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் ஸ்திரம் பெற்ற வர்க்க ஒழுங்கும், தேசிய அம்சங்களும், கட்சிமுறை வளர்ச்சியின் இயல்புகளும், தனி அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளும் எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையும் வழி சமைத்துள்ளன (அன்ரப்புப் சர்மாவுப, 1992: 99).

## இரண்டரைக் கட்சி முறை
## Two and a Half Party System

இரண்டரைக் கட்சிமுறை என்பது பலம் வாய்ந்த இரு பெரிய கட்சிகளுடன், சிறியதாக இருப்பினும் மூன்றாம் கட்சி யொன்று அதிகாரப் போட்டியிலோ அல்லது அரசாங்கத்தை நிர்வகிப்பதிலோ முக்கிய பங்கை வகிப்பதாகும். இந்த மூன்றாவது கட்சியே அரைக்கட்சியாகக் கணிக்கப்பட்டு முழு முறையும் இரண்டரைக்கட்சி என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய கட்சிமுறைப் போக்குகளை லெசோதத்தோ, குவாட்டமாலா, எல்சல்வடோர், குயானா, பாபடோஸ் போன்ற நாடுகளில் அவ்வப்போது காணக்கூடியதாக உள்ளது 1986 தேர்தலின் பின்னர் ஸ்பெயினிலும் இப்போக்குக் காணப்படுகிறது.

## பல கட்சிமுறை: (Multi Party System)

டுவேஜரின் படி பல கட்சிமுறை என்பது மூன்று முதல் அதற்கு மேற்பட்ட கட்சிகளைக் கொண்டதாகும். (டுவேஜர், 1954 : 228). விளண்டலும், வலன்ரைனும் 4 அல்லது 5 கட்சிகள் பெருமளவுக்கு சமமான பலத்துடன் காணப்படுதலைப் பல கட்சிமுறை என்கின்றனர் (விளண்டலும், வலன்ரைனும், 1972 : 65). கேட்டிஸ்ஸின் படி பல கட்சி முறை என்பது எந்த ஒரு கட்சியும் தனித்து அறுதிப் பெரும்பான்மைப்பலம் பெறமுடியாதபடி பல கட்சிகளின் பெருக்கம் காணப்படுதலாகும். (பூசன், 1988 : 120). சமூகத்தில் காணப்படும் பிளவுகளும், குழு முறை அடிப்படையிலான அரசியலும். உயர்குழாத்தினரின் பிரித்தாளும் தந்திரங்களும். கட்சிகளின் நிலையூன்றிய நலன்களும், விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையும், தேர்தல் விதிகள் போன்றவையும் பல கட்சி முறையைத் தூண்டி வளர்க்கின்றன. பூசன் (1988:121).

பொதுவாகப் பலகட்சி முறையானது அரசியல் ஸ்திரம், ஜனநாயக வளர்ச்சி, சமூக பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றைப் பெரிதும் பாதிப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் பல கட்சி முறையில் உறுதியான பல கட்சிமுறை, உறுதியற்ற பல கட்சி முறை என இரண்டு பிரிவுகளாக மேலும் விளக்கப்படுகிறது உறுதியான பல கட்சி முறைக்கு உதாரணமாக சுவிற்சர்லாந்து, ஸ்கன்டிநேவியன் நாடுகள், நெதர்லாந்து, இஸ்ரேல், ஜப்பான் போன்றவை உள்ளன. 1958 ல் 5 ம் குடியரசு உருவாகுவதற்கு முந்திய பிரான்ஸ், இன்றைய இத்தாலி, இந்தியா போன்றவை உறுதியற்ற பல கட்சி முறைக்கு உதாரணமாகும்.

## கச்சோல் கட்சி முறை
## (Catchall Party System)

''கச்சோல்'' என்ற பதம் (Catch all) ''சகலதையும் பிடித்தல்'' என்று பொருள் படுகிறது. ஜேர்மனிய கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் பின்னணியில் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய ஐரோப்பிய அரசியல் கட்சிகளின் அபிவிருத்திகளை ஆராயும் கிர்ச்ஹெய்மர் (1966) அவற்றைச் சகலதையும் பிடிக்கும் கட்சிகளாக, அதாவது சகல சமூகப் பிரிவினரதும் ஆதரவைப் பெறுகின்ற கட்சிகளாக விளக்குகின்றார் இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னர் ஐரோப்பாவில் மார்க்சிசக் கட்சிகள் தொழிலாள வர்க்கத்துடனும், விவசாயிகளின் கட்சிகள் விவசாய வர்க்கத்துடனும். பழமை பேணும் கட்சிகள் உயர் - மத்திய வர்க்கங்களுடனும் கத்தோலிக்க மதச்சார்பான கட்சிகள் கத்தோலிக்க மக்களுடனும் கட்டுண்டு காணப்பட்டன. ஆனால் உலகப் போரின்பின் உருவாகிய புதிய நிலைமைகளும், தேவைகளும் இக்கட்சிகள் தமது மரபுரீதியான வரம்புகளை மீறி முற்போக்காகச் சிந்திக்கவும், முழுச் சமூகத்தின் நலன்பற்றி அக்கறை கொள்ளவும் தூண்டின. பிரித்தானிய, கனடிய பழமை பேணும் கட்சிகள், ஸ்பானிய, பிரெஞ்சு சோசலிசக் கட்சிகள், இத்தாலிய ஜேர்மனிய கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிகள்

கள், ஜப்பானிய தாராண்மைவாதக் கட்சி என்பவை அடிப்படையில் வர்க்க நோக்கை கொண்டிருந்தாலும் இன்று சமூகம் முழுவதற்கும் குரல் கொடுக்கப் பின்னிற்பதில்லை. சுச்சோல் கட்சிமுறைப் பண்புகள் ஐரோப்பாவுக்கு வெளியில் உலகின் ஏனைய அரசியல் முறைகளின் கட்சிகளிலும் அவதானிக்கத்தக்க ஒரு முற்போக்கான மாற்றமாகும்.

கோட்பாட்டுரீதியான வகைப்படுத்தல்:

கட்சிகளின் கோட்பாட்டுரீதியான இறுக்கம் தளர்ந்துவருகின்றபோதிலும் அவற்றை சில முனைப்பான கோட்பாட்டு அம்சங்களின் அடிப்படையிலும் வகைப்படுத்தும் முறையும் உண்டு. அவ்வகையில் 7 விதமான கோட்பாடுகளுடன் கட்சிகளை அடையாளம் காணமுடியும்.

கம்யூனிசம் (Communism)

கம்யூனிசக் கோட்பாடானது முக்கியமாக மார்க்சிச - லெனினிசத்தை அல்லது மார்க்சிச - லெனினிச - மாவோயிசத்தை உள்ளடக்குகிறது. (முன்னைய) சோவியத் கம்யூனிசக் கட்சியும், சீனக்கம்யூனிசக் கட்சியும், இரு பிரபலமான கம்யூனிசக் கட்சிகளாகும் இவற்றின் தலைமையை ஏற்றுக்கொண்டு இயங்கும் கம்யூனிசக் கட்சிகளையும் பல நாடுகளில் காணலாம்.

ஜனநாயக சோசலிசம்
(Democratic Socialism)

வலதுசாரிப் போக்குடைய கம்யூனிசவாதிகள் ஜனநாயக சோசலிசக் கட்சியில் இடம்பெறுகின்றனர். கம்யூனிசமல்லாத சோசலிசத்தை நடைமுறைப்படுத்த இவர்கள் விரும்புகிறார்கள். உலகின் எல்லா ஜனநாயக முறைகளும் இத்தகைய கட்சிகளைக் கொண்டுள்ளன. இவற்றில் முக்கியமானவையாக அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி, அவுஸ்திரேலியா சோசலிசக் கட்சி, நோர்வே தொழிலாளர் கட்சி, பிரான்சிய, பெல்ஜிய சோசலிக் கட்சிகள், சுவீடன், டென்மார்க், பின்லாந்து, மேற்கு ஜேர்மனி என்பவற்றில் உள்ள சமூக ஜனநாயகக் கட்சிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கிறிஸ்தவ ஜனநாயகம்
(Christian Democratic)

சமூகத்தின் இலௌகிக முன்னேற்றங்களை விடுத்து ஆன்மீகத் தூய்மையையும், விடுதலையையும் விரும்பும் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகள் முதலாளித்துவம் சோசலிசம் என்ற இரண்டிலும் உள்ள தீமைகளைக் களையவிரும்புகின்றனர் மிதமிஞ்சிய செல்வம், மிதமிஞ்சிய வறுமை என்பவற்றை ஒழிப்பதற்கும், சமமான செல்வப் பகிர்வுக்கும் முற்படும் இவர்கள் அதன் பொருட்டு முதலாளிகளையும் தொழிலாளர்களையும் கொண்ட கூட்டுறவான அமைப்பொழுங்கு ஒன்று உருவாக வேண்டும் என்கின்றனர். முதலாளிகளும், தொழிலாளர்களும் இறைவனின் குழந்தைகளே என்பது இவர்களது நிலைப்பாடாகும். பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஜேர்மனி போன்ற கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிகள் காணப்படுகின்றன.

தாராண்மை வாதம் (Liberalism)

இருபதாம் நூற்றாண்டுத் தாராண்மைவாதிகள் சோசலிசத்துக்கும், முதலாளித்துவத்துக்கும் இடையிலான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். மேற்கு நாடுகளில் முக்கியமான 4 அல்லது 5 கட்சிகளில் ஒன்றாக தாராண்மைவாதக் கட்சி காணப்படுகிறது. பிரான்சின் தீவிரவாதக்கட்சி, சுவிற்சர்லாந்தின் தீவிர ஜனநாயகக்கட்சி, மேற்கு ஜேர்மனியின் சுதந்திர ஜனநாயகக்கட்சி, பெல்ஜியத்தின் உரிமைக்கும் முன்னேற்றத்துக்குமான கட்சி போன்றவை முக்கிய தாராண்மை வாதக்கட்சிகளாகும்.

### ஜனநாயகப் பழமைவாதம்
### (Democratic Conservation)

ஜனநாயகப் பழமைவாதம் சில ஐரோப்பிய வலதுசாரிக் கட்சிகளின் கோட்பாடாகும் இவர்கள் ஜனநாயக முறையிலான அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டு அதைப் பாதுகாக்க விரும்பும் அதே வேளையில், சோசலிசத்தையும், நலன்புரி அரசையும் நோக்காகக் கொண்ட போக்கையும், மற்றும் மரபுரீதியான சமூக பொருளாதார முறைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களையும் கடுமையாக எதிர்ப்பதோடு, பழைய நிலைக்கு மீளவும் வேண்டும் என்கின்றனர். முக்கிய உதாரணங்களாகப் பிரான்சின் சுதந்திரக் கட்சி, ஸ்கன்டிநேவியாவின் பழமை பேணும் கட்சிகள், ஐரோப்பிய விவசாயிகளின் கட்சிகள் போன்றவற்றைக் கூறலாம்.

### ஜனநாயக எதிர்ப்புப் பழமைவாதம்
### (Antidemocratic Conservatism)

சில ஐரோப்பிய இடதுசாரிக் கட்சிகள் பண்டைய சமூக பொருளாதார முறைகளுக்கு திரும்பும் நோக்கோடு தீவிரமான மீட்சி நடவடிக்கைகளுக்கான வழிகளை முன்வைப்போராகவும், பெரும்பான்மை ஜனநாயக முறையை நீக்க விரும்புவோராகவும் காணப்படுகின்றனர். ஆனால் இவை சமாதானமான வழிமுறைகள் மூலமே சாத்தியப்படவேண்டும் என்கின்றனர். அவுஸ்திரேலிய சுதந்திரவாதிகளினதும், இத்தாலிய முடியாட்சிவாதிகளினதும் கட்சிகளை சில உதாரணங்களாகக் கூறலாம்.

### ஜனநாயக எதிர்ப்புத் தீவிரவாதம்
### (Antidemocratic Radicalism)

சில தீவிர வலதுசாரிகள் ஜனநாயகத்தை விரோதிப்போராகவும், அதை எவ்வழியிலேனும் அழித்துவிட முற்படுவோராகவும் உள்ளனர். ஹிட்லர், முசோலினியின் வரிசையில் நவபாசிசவாதிகளாக இனம் காணப்படும் ஜனநாயக எதிர்ப்புத் தீவிரவாதிகளின் கட்சிகளை இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் காணலாம்.

### அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை மதிப்பிடல்

நவீன வரலாற்றில் நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் பிரமாண்டமான தேசிய அரசுகள் தோன்றிய போதும், அவற்றுடன் இணைந்து மறைமுக ஜனநாயகம் வளர்ந்து வந்த போதும், அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே தரகர்களாகக் கட்சிகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகியது. ஸ்திரமடைந்து வந்த மக்களாட்சி யுகத்தில நலன்புரி அரசுகளின் வளர்ச்சியானது, அரசாங்க இயந்திரத்தின் அச்சாக விளங்கிய அரசியல் கட்சிகளின் அந்தஸ்து, செல்வாக்கு, அதிகாரம், முக்கியத்துவம் என்பவை மேலும் அதிகரிக்கக் காரணமாகியது. அதேசமயம், கட்சி அரசியல் கடுமையான விமர்சனங்களையும் சந்தித்து வந்துள்ளமை உண்மையாகும். கட்சி அரசியல் குழுமனப்பான்மையை வளர்த்துச் சமூகத்தைத் தூண்டித் தேசிய முன்னேற்றத்தைத் தடுப்பதாகவும், பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்குப் பதிலாகக் கட்சி அபிப்பிராயத்தை மக்கள் மீது திணிப்பதாகவும், தேசிய நோக்கையும், தேசிய நலனையும் புறக்கணித்துக் கட்சி நோக்கையும், கட்சி நலனையும் பேணமுற்படுவதாகவும், நாணயமானவர்களையும் நேர்மையானவர்களையும் அரசியலில் ஒதுக்கி சுயநலக்காரர்களையும், சூழ்ச்சிக்காரர்களையும் வளர்ப்பதாகவும், மக்களின் சுதந்திரமான சிந்தனையையும், செயலையும் தடுத்து மந்தைக் கூட்டங்களாக மாற்றுவதாகவும் கட்சி பற்றிய விமர்சனப்பட்டியல் பலவழிகளில் நீண்டு செல்கிறது.

சமூகவியலாளர்களான மொஸ்கா (1939), மிச்சல்ஸ் (1949), பரட்டோ (1969) போன்றோர் கட்சிகளை உயர்,

குழாத்தினரின் நலன்களும், அபிலாசைகளும் பாதுகாத்து வளர்க்கும் அமைப்புக்களாகவே தெளிவுபடுத்தினார்கள். ரசலின் அபிப்பிராயத்தில் 'மிகவும் வெற்றிகரமான ஜனநாயக அரசியல்வாதி யாரெனில் ஜனநாயகத்தை அழித்துச் சர்வாதிகாரியாக வருவதில் வெற்றி பெற்றவரே ஆவார்' (ரசல், 1936:106). மார்க்சிச வாதிகளின் படி கட்சிமுறை ஜனநாயகம் என்பது சாமானிய மக்களை ஏமாற்றும் செப்பிடு வித்தையாகும் (லெனின் 1972 : 43) பேற்மன் (1956), அரண்ட் (1979), ஹேபமார்ஸ் (1984) ஆகியோரின் ஆக்கங்கள் ஜனநாயகத்தின் மத்தியமயமாக்கப் பண்புகளைக் கடுமையாகச்சாடி உண்மையான மக்கள் பங்குபற்றலுக்கான அவசியத்தை வலியுறுத்துகின்றன.

கட்சிகள் பற்றிய பாதகமான அம்சங்கள் இருப்பது போல சாதகமான அம்சங்களும் சமமாக இருக்கின்றன சமூகத்தின முரண்பட்ட குழுக்களை இணைப்பதிலும், சமூக நலன்களை இனங்கண்டு வெளிப்படுத்துவதிலும், சமூக நலன் பேணும் கொள்கைத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதிலும், மக்களின் அரசியல் அறிவையும், அரசியல் பங்குபற்றலையும் அதிகரிக்க வைப்பதிலும், அரசாங்கக் கட்சியாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ இயங்கி ஜனநாயகத்துக்கு வலுவூட்டுவதிலும், நவீனத்துவம், அபிவிருத்தி, நாட்டு நிர்மாணம் போன்றவற்றுக்கான வாகனமாகவும் விளங்கியும் ஜனநாயகத்தில் கட்சிகள் ஆற்றும் பணியை மறுக்க முடியாது. குடியேற்றவாதத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் கட்சிகளின் வரலாற்று ரீதியான பங்களிப்பை யாவரும் அறிவர்.

கட்சிகளின் சிறப்புக்கு உள்வாரியான காரணிகளைப் போல வெளிவாரியான காரணிகளும் அவசியமானவை என்பது உணரப்பட வேண்டியதாகும். நீண்ட ஜனநாயகப் பாரம்பரியமும், அபிவிருத்தியடைந்த பொருளாதாரமும், அரசியல் அறிவும், விழிப்புணர்வும் கொண்ட வாக்காளரும், சுதந்திரமான வெகுஜனச் சாதனங்களும், நல்ல அரசியல் யாப்பு, தேர்தல்விதிகள் போன்ற வெளிவாரியான அம்சங்களும் கட்சிகளைப் பண்படுத்தி வளர்க்கமுடியும். இப்பண்புகளைப் அல்லது இப்பண்புகளில் பெரும்பாலானவற்றைக் கொண்ட ஜனநாயக முறைகள் மேற்கு நாடுகளில் வெற்றி பெற்றிருப்பதைக் காணலாம்.

மூன்றாம் உலகநாடுகளில் கட்சிமுறை ஜனநாயகம் தேக்கம் அடைவதற்கு சில பொதுவான, வெளிப்படையான வரலாற்றுக் காரணங்கள் உண்டு. சுதந்திரத்தின் முன் பெரும்பாலான நாடுகளில் கட்சிகளின் வளர்ச்சி ஆரம்பக் கட்டத்திலேயே இருந்தது. சுதந்திரத்தையடுத்து வந்த தேர்தல்களைச் சந்திப்பதற்காக இந்நாடுகளில் உயர் குழாத்தினர் மேற்கு நாடுகளின் பாணியில் அவசரமாகக் கட்சிகளை உருவாக்கித் தமது சொந்த அமைப்புக்கள் போலவே நடத்தி வந்தனர். இத்தகைய செயற்கையான கட்சி அடிப்படை சனத்தொகையில் பெரும்பான்மையான கிராமப்புறமக்களை அரசியலில் அந்நியப்படுத்தி விட்டது அத்துடன் உயர்குழாத்தினர் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திப் பாதுகாக்கும் நோக்கில் சாமானிய மக்களை ஏமாற்றும் தந்திரோபாயங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தபோது ஜனநாயக அரசியல் மேலும் சீரழியலாயிற்று.

சிலர் கட்சிகள் பற்றிய பொதுவான பல குறைபாடுகள் தனிக்கட்சி முறையில் மிக அரிது என்றும், ஒழுங்கு, கட்டுப்பாடு, திறமை, முன்னேற்றம் போன்றவை ஒப்பீட்டு ரீதியாகத் தனிக்கட்சி முறையில் அதிகம் என்றும் வாதிடுவர். (ஹன்ரிங்ரனும் மூரும், 1970) ஆனால், நாகரிக வளர்ச்சிக்கும், ஜனநாயக யுகத்துக்கும் மாறான தனிக்கட்சிமுறை நீண்ட ஓட்டத்தில் நிலைக்கக் கூடியதோ அல்லது நன்மையானதோ அன்று. இங்கு ஸ்கற்ச்நெய்டர்

என்ற புகழ்பெற்ற அறிஞரின் கட்சி அரசாங்கம் என்ற நூலின் தொடக்கக் குறிப்பு நோக்கத்தக்கது (ஸ்கற்ச்நெய்டர், 1942:1).

கட்சிகள் உருவாக்கிய நவீன
ஜனநாயகம் கட்சிகள் இல்லாமல்
இயங்க முடியாத ஒன்றாகும்.
... ... ... உண்மையில் எந்த
ஒரு அரசின் தாரதம்மியத்தையும்
சிறப்பாக வெளிப்படுத்துபவையாகக்
கட்சிகள் காணப்படுகின்றன. நவீன
அரசியல் கோட்பாட்டில் வேறுபட்
டமையும் ஜனநாயகத்துக்கும்,
சர்வாதிகாரத்துக்குமிடையிலான
பிரிதளத்தைக்
கட்சி அரசியலின் அடிப்படை
யில்தான் காணமுடியும் ஆகவே
கட்சிகள் என்பவை நவீன அரசாங்கங்களின்
உப அங்கமாகவன்றி
அதன் மையமாகவும், தீர்க்கமானதும்
ஆக்கபூர்வமானதுமான பங்கை
வகிப்பவையாகவும் உள்ளன.

அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளைப் பற்றிய மதிப்பீட்டைப் பூர்த்தி செய்ய முன்னர் தனிப்பட்ட முறையில் ஒரு சிறந்த ஜனநாயகக் கட்சிக்கு இருக்க வேண்டிய பண்புகளையும் கோடிட்டுக்காட்ட வேண்டும். அவை பின்வருமாறு :

(1) கட்சிக் கோட்பாடுகள் சுயநலமற்றவையாகவும், முற்போக்கானவையாகவும், தூரநோக்குடையவையாகவும் இருக்க வேண்டும்; தேசிய நலன் தொடர்பான அடிப்படை விடயங்களில் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை காணப்படல் வேண்டும்-

(2) ஜனநாயக முறையில் ஏற்படும் அமைதியான ஆட்சி யாற்றத்தில் கட்சிகள் உறுதியான நம்பிக்கை கொள்ளவேண்டும். வாக்குச் சீட்டை விட வலிமையானது ஜனநாயகத்தில் வேறு எதுவும் இல்லை.

(3) கீழிருந்து மேலாகவும், மேலிருந்து கீழாகவும் இருவழித் தொடர்பாடலும், சகல மட்டங்களிலும் மக்கள் பங்கு பற்றலும் கட்சி அமைப்பில் வலிமை பெறல் வேண்டும்: உட்கட்சி ஜனநாயகம் இல்லாமல் வெளிக்கட்சி ஜனநாயகம் சாத்தியப்படுவதில்லை.

(4) கட்சிக்காகத் தலைவர்களே அன்றித் தலைவர்களுக்காகக் கட்சிகள் என்ற நிலை தோன்ற இடமளிக்கக்கூடாது. தனிநபர் ஆளுமை வலுப்படுதல் கட்சியைத் தவறான வழியில் திசை திருப்பிவிடும்,

(5) அர்த்தமுள்ளதும் ஆக்கபூர்வமானதுமான கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைப்பதன் மூலம் உண்மையான பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கவும், பின்னர் அதை மதிக்கவும் கட்சிகள் முற்படல் வேண்டும்; ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு அவசியமான அறிவுபூர்வமாகச் சிந்தித்துத் தொழிற்படவல்ல பிரசைகளை உருவாக்கும் பணியில் கட்சிகள் ஓயக்கூடாது.

(6) கட்சி விவகாரங்கள் அளவுக்கு மீறியும், அநாவசியமாகவும் அந்தரங்கமாக இருக்கக்கூடாது; தமது உண்மையான முகத்தைக் காட்டப் பின்னிற்கும் அல்லது மறுக்கும் அல்லது பயப்படும் கட்சிகளை மக்கள் மதிப்பதில்லை.

(7) நாட்டின் அரசியல் திட்டமும், தேர்தல் விதிகளும், நீதித்துறையும் கட்சிகளைக் கட்டுப்படுத்திக் கண்காணித்து நெறிப்படுத்தும் பாங்கினைப் பெற்றிருத்தல் வேண்டும். உள்வாரியான அம்சங்கள் போல வெளிவாரியான சில அம்சங்களும் கட்சிமுறை ஜனநாயகத்துக்குப் பங்களிப்புச் செய்ய முடியும்.

(8) இலட்சிய ஜனநாயகத்துக்கு இருகட்சி முறையின் வளர்ச்சி இன்றியமையாதது; பல கட்சி முறை காணப்பட்டாலும் கட்சிகளின் கட்டமைப்பும், மக்களின் வாக்களிப்பு முறையும் இரு கட்சிமுறைப் போக்கை ஏற்படுத்தல் வேண்டும்.

கட்சிமுறை ஜனநாயகத்தின் குறைபாடுகளைப் பெருமளவுக்குக் களைந்த ஒரு முன்னுதாரணமான நாடாகச் சுவிற்சர்லாந்து விளங்குகிறது. சுவிற்சர்லாந்து பன்மைச் சமூக அமைப்பையும், பல கட்சி முறையையும் பெற்றிருப்பினும் கட்சிகளுக்கிடையிலான வேறுபாடுகளும், முழுநேர அரசியல் வாதிகளும் அருகிக் காணப்படுதலும்; சிறிய தேர்தல் தொகுதிகள் கல்வியறிவுமிக்க சுவிஸ் பிரசைகள் கட்சியடிப்படையில் அன்றித் திறமையடிப்படையில் அபேட்சகர்களைத் தெரிய வாய்ப்பளிப்பதும்; நிர்வாகத்துறையில் அமைப்பும் இயக்கமும் தேசிய நலனைப் பேணும் விதத்தில் காணப்படுதலும்; யாவற்றுக்கும் மேலாக நேரடி ஜனநாயக வழிமுறைகள் மூலம் மக்களின் அரசியல் பங்குபற்றல் இபரிமிதமாக அதிகரித்துள்ளமையும் சுவிற்சர்லாந்தின் ஜனநாயகத்தைத் தனித்துவமும், சிறப்பும் மிக்கதாக மாற்றியுள்ளன (Giord, 1964).

## முடிவுரை

இதுகாறும் அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்கண்டு, வகைப்படுத்தி, மதிப்பிட்ட நாம் முடிவாகச் சில பொதுவுண்மைகளைச் சுருக்கமாக முன்வைக்கலாம் அரசியல் கட்சிகளும், அவை தொடர்பான ஆய்வுகளும் பெருமளவுக்கு 20-ம் நூற்றாண்டின் பிரத்தியட்சங்களேயாகும் கட்சிகள் பற்றிய வரைவிலக்கணங்களும், எடுகோள்களும், எண்ணக்கருக்களும், கோட்பாடுகளும் பல்கிப் பெருகிக் காணப்படினும் அவை பூரணமற்றவையாகவும், சர்ச்சைக்குரியவையாகவுமே உள்ளன. இருப்பினும், நவீன அரசியல் முறைகளுடன் இரண்டறக் கலந்துள்ள கட்சிகள் பற்றிய ஆய்வானது அரசியல் முறைகளைத் துல்லியமாக விளங்கவும், அரசியல் யதார்த்தங்கள் பலவற்றை வெளிக்கொணரவும் வாய்ப்பளிக்கிறது. எல்லா அரசியல் முறைகளிலும் கட்சிகள் காணப்படினும் ஜனநாயக அரசியல் முறைகளிலேயே அவை பெருமளவுக்கு மக்கள் அமைப்புக்களாக வளர்ந்துள்ளன. அதிலும் குறிப்பாக, இருகட்சிகளை அல்லது இருகட்சிப் போக்கைக் கொண்ட அரசியல் முறைகளிலேயே ஜனநாயகம் வளர்ப்பம் பெற்றுள்ளது. கட்சிகளின் ஆரம்பகாலவர்க்க அடிப்படைகள் காலவோட்டத்தில் பலவீனமடைந்தோ அல்லது மறைந்தோ தேசிய அடிப்படைகள் உறுதி பெற்று வந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

கட்சிகளால் சில சமூகச் சீரழிவுகள் ஏற்படினும் நவீன அரசாங்கங்களின் சுழல் மையமாகக் கட்சிகளே உள்ளன என்பது வெளிப்படையான உண்மையாகும் இதனால் கட்சிகளை ஒட்டுமொத்தமாக நிராகரிக்காமல் அவற்றை நியாயப்படுத்த முற்படுவதே பொருத்தமாகத் தெரிகிறது. தனிநபர் உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கும் தாராண்மைவாத சிந்தனையாளர்கள் அரசினை ஒரு அவசியமான தீங்காகவே கருதுகின்றனர். அவ்வாறாயின், அவ்வரசின் நடைமுறை அம்சமாகிய அரசாங்கத்தின் அடிப்படையாக விளங்கும் கட்சிகளையும் ஒரு அவசியமான தீங்காகவே கருத வேண்டியுள்ளது. ஆகக்குறைந்த தீங்குகள் கொண்டதாகக் கருதப்படும் ஜனநாயக அரசாங்கமுறைக்கு, மாற்று வழிகள் இல்லாத நிலையில், அவசியமான ஒரு தீங்காகக் கட்சிகளும் அமைகின்றன எனலாம்.

## உசாத்துணை:

Alexander Herbert (1972), Money in Politics Washington,D. C. Public Affairs Press.

Arendt Hannah (1979), On Revolution. London: Penguin Books.

Ashraf Ali and Sharma L. N, (1992), Political Sociology; A New Grammar of Politics, Hyderabad: Universities Press.

Ranney Austin (1968), "The Concept of Party" in Garceau Olivered. Political Research and Political Theory, Cambridge Mass Havard University Press.

Ball, Alan R. (1969), Modern Politics and Government, London: Macmillan Press Ltd.

Bushan Vidya (1988), Comparative Politics, New Delhi: Atlantic Publishers.

Blondel Jean and Herman Valentine (1969), An Introduction to Comparative Government London: Weiden Feld and Nicolson.

........................... (1972), Workbook for Comparative Politics. Ibid.

Curtis Michael (1968), Comparative Government and Politics, New York: Harper and Row Publishers.

Duverger Maurice (1954), Political Parties Their Organization and Activities in the Modern State, trans., New York: John Wiley and Sons.

........................... (1972) Party Politics and Pressure Groups trans., London: Nelson and Sons.

Epstein, Leon D. (1967), Political Parties in Western Democracies, New York: Frederick A. Praeger Inc.,

Finer Herman (1963), The Theory and Practice of Modern Government, London: Methuen and Company Ltd.

Friedrich, Carl. J. and Brzezinski, Zbigniew K. (1965), Totalitarian Dictatorship and Autocracy, Cambridge Mass Harvard University Press.

Girod Roger (1964) "Switzerland" in Allardt Erik and Littunen Yrjo eds , Changes, Ideologies and Party Systems, Turku Westermarck Society.

Gregor, James A. (1969), The Ideology of Fascism, New York : The Free Press.

Hennessy Bernard (1968), "On the Study of Party Organization" in Croty William D. ed., Approaches to the Study of Party Organization, Boston : Bacon Press.

Henning Stanely and Pinder Jon (1969), ed., European Political Parties, London: George Allen and Unwin Ltd.

Herbamas J. (1984) The Theory of Communicative Action, VOL. 1, trans , Boston: Bacon Press.

Huntington, Samuel P. and Moore, Clement H. (1970), Authoritarian Politics in Modern Society: The Dynamics of One Party Systems, ed., New York: Basic Books, Inc.

Keefe, William J. (1972), Parties Politics and Public Policy in America, New York: Holt, Rinehart and Winston Inc.

Key, V. O. (1949). Southern Politicsin State and Nation, New York: Alfred A. Knopf.

......... (1964) Political Parties and Pressure Groups, 5th edition, New York: Thomas Y. Crowell Company.

King Anthony ( 1969 ) ' Political Parties in Western Democracies: Some Sceptical Reflections", Polity, 1.

Kirchheimer Otto (1966) "Germany: The Vanishing Opposition" in Political Oppositions in Western Democracies, Dahl, Robert. A. ed., New Haven : Yale University Press.

Lenin, V. I. The State and Revolution (1972), Moscow: Progress Publishers.

McDonald, Neil A. (1955), The Study of Political Parties, New York: Random House, Inc.

Michels Robert ( 1949 ), Political Parties: A Sociological Study of Oligarchical Tendencies, trans., first published in 1915, Illinois : Free Press.

Mosca Gatetano (1939), The Ruling Class trans., New York: MacGraw Hill

Neumand Sigmund (1956). Modern Political Parties ed., Chicago: Chicago University Press.

Ostrogorski M. Y. (1964), Democracy and the Orgaaization of Political Parties 2 VOLS. Chicago: Quadrangle.

Palombara, Joseph La and Weiner Myron (1966). Political Parties and Political Development, eds., Princeton, New Jersy: Princeton University Press.

Pareto Vilfredo (1963). The Mind and Society: A Treatise on General Sociology, trans., New York: Harcourt, Brace and Company.

Pateman Carole (1970). Participation and Democratic Theory, Cambridge University Press.

Rose Richard and Heidenheimer, Arnold J. (1963), eds., Journal of Politics, 25.

Russell Betrand (1938), Power: A New Social Analysis, London: Allen and Unwin

Sartori Giovanni (1954). Parties and Party System : A Framework for Anaļysis, VOL 1, New York: Cambridge University Press.

........ (1965) Democratic, Theory, New York: Frederick A. Praeger, Inc.

Schattschneider E. E. (1942) Party Government, New York: Holt, Rinehart and Winston

Schumpeter I. A (1950), Capitalism Socialism and Democracy, New York Harper and Row Publishers.

Wiatr Jerzy J. (1964) "One Party Systems: The Concept and Issue for Comparative Studies" in Allarclt Erik and Littunen Yrjo eds., Changes, Ideologies and Party Systems, Turku: Westermarck Society

........ (1969). "The Hegemonic Party System in Poland" in Allardt Erik and Rokkan Stein eds. Studies in Political Sociology New York: The Free Press